# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மார்ச் –18 | 31–03–2004 | புதன்கிழமை | ஓசை –042







# மட்டு.மாவட்ட தமிழரசுக்கட்சி வேட்பாளர்

# ராஜன் சத்தியமூர்த்தி சுட்டுக்கொலை!

## சம்பவத்தில் மைத்துனரும் பலி



(மட்டக்களப்பு)

**மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக் கட்சி வேட்பாளர் ராஜன் சத்திய மூர்த்தி நேற்றுக் காலை இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் பலியாகியுள்ளார் அத்துடன் அவரது மைத்துனர் ஒருவரும் இச்சம்பவத்தில் கொல்லப்பட்டதுடன் மருமகன் ஒருவரும் படுகாயமடைந்தார். மட்டக்களப்பு நகரில் திருமலை வீதியிலுள்ள அவரது இல்லத்தில் வைத்து துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.**

நேற்றுக்காலை எட்டுமணியளவில், இடம்பெற்ற இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது;

நேற்று முன்தினம் இரண்டு பேர் ராஜன் சத்திய மூர்த்தியிடம் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றுக்கு வருமாறு அழைத்ததாகவும் அதனை அவர் ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து நேற்றுக்காலை இவரை அழைத்துச் செல்ல இருவர் வந்ததாகவும் அவர்களுடன் வீட்டுக்கு வெளியில் நின்று உரையாடி அவர் பின்னர் உடைமாற்றி வருவதாகக கூறி வீட்டிற்குள் அவர்களையும் அழைத்துச்சென்ற வேளையில் இச்சம்பவம் இடம்பெற்றதாகவும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## ராஜன் சத்தியமூர்த்தி கொலைக்கு விடுதலைப்புலிகள் கண்டனம்

மட்டு. மாவட்ட தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் திரு.ராஜன் சத்தியமூர்த்தி படுகொலை செய்யப்பட்டமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் இயக்கம் வன்மையாகக் கண்டனம்தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக தமிழீழ அரசியல்துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் தேர்தல் நெருங்கிவரும் வேளையில் மட்டு மாவட்டத்தில் அண்மையில் அதிகரித்து வரும் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் சனநாயக ரீதியான தேர்த லுக்கும் சமாதான முயற்சிக்கும் ஊறு விளைவிக்கத் தக்கதாகும்.

வடக்கு- கிழக்கு மக்கள் தேர்தல் மூலம் தமது அபிலாசைகளை வெளிப்படுத்த தயாராகிக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் திருராஜன் சத்திய மூர்த்தி சுட்டுகொல்லபட்டமையானது மட்டு மாவட்டத்தில் குழப்பத்தை

(08ஆம் பக்கம் பார்க்க)

## கொலை அச்சுறுத்தல் குறித்து சத்திய மூர்த்தியை எச்சரித்தேன்

### -சிறிலங்கா பொலிஸ்மா அதிபர்

(கொழும்பு)

ராஜன் சத்தியமூர்த்திக் கெதிரான கொலை அச்சுறுத்தல் சம்பந்தமாக தாம் எழுத்து மூலம் அறிவித்திருந்ததாக பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் தமது அறிவிப்பை ராஜன் சத்தியமூர்த்தி ஏற்றுக் கொள்ளவில்லைஎனப் பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார்.மரண அச்சுறுத்தல் இருக்கும் தமிழரசுக் கட்சியின் 7 வேட்பாளர்களுக்கும் பொலிஸ்மா பாதுகாப்பை ஏற்றுக் கொள்ளுமாறு தாம் கூறியுள்ள போதும் அவர்கள் அதனை நிராகரித்துவருவதாகவும் பொலிஸ்மா அதிபர் கூறியுள்ளார். (32)

## மட்டு. தெரிவத்தாட்சி அதிகாரியாக புண்ணியமூர்த்தி நியமனம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான தெரிவத்தாட்சி அதிகாரியாக மட்டு. மேலதிக அரசாங்க அதிபரான எஸ்.புண்ணிய மூர்த்தி தெரிவு செய்யப்பட்டுள்ளாரென தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் அம் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அதிகாரியுமான மோனகுருசாமி கடந்த சனிக்கிழமை இனம் தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்துள்ளமை தெரிந்ததே.

## ஐ.ம.சு.முன்னணி- மு.காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கிடையே மோதல்

சம்பாந்துறையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் ஆதரவாளர்களுக்கும் இடையில் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது. இன்று பிற்பகல் 2.30 மணி அளவில் இடம்பெற்ற இந்த மோதலின் போது, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரண்டு வாகனங்கள் எரியூட்டப்பட்டன. இதே வேளை அமைச்சர் ரவூப் ஹக்கீம் கீழுள்ள துறைமுக அதிகார சபைக்குச் , சொந்தமான வாகனம்ஒன்றில். இருந்து பெருமளவு

(08ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜன் படுகொலை சந்தேகநபர் ஜெகன் பொலிசாரால் கைது

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலைச்சம்பவம் தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த முதலாம் எதிரி ஜெகன் எனப்படும் கந்தசாமி ஜெகதீஸ்வரன் ஊர்காவற்றுறையில் வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரான ஜெகன் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நேற்று ஆஜர் செய்யப்பட்டிருந்த வேளை அவரை ய்ாழ். சிறைச்சாலையில் தடுத்து வைப்பதற்கான உத்தரவை ஊர்காவற்றுறை நீதிவான்

(08ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பிலுள்ள யாழ்.வர்த்தகர்களை வெளியேறுமாறு கருணாகுழு மிரட்டல்

### நேரடியாக விடுக்கப்பட்ட எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பிலுள்ள யாழ்.வியாபாரிகள் அரிசி ஆலை உரிமையாளர்களை வெளியேறு மாறு கருணா குழுவினரால் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் இதன் காரணமாக மட்டக்களப்பு நகரில் நேற்று பிற்பகலில் பதட்டமானதொரு நிலை காணப்பட்டதாகவும் தெரியவருகின்றது.

கருணா குழுவினரால் இம் மிரட்டல் நேரடியாக விடுவிக்கப் பட்டதாகவும் இதனால் யாழ். மாவட்ட வியாபாரிகளின் வர்த்தக நிலையங்கள், அரிசி ஆலைகள் நேற்று மாலை மூடப்பட்டு கிடந்ததாகவும் தெரியவருகின்றது.

ஏற்கனவே கருணா விடுதலைப்புலிகள் இயக்கத்திலிருந்து வெளியேற்றப்பட்ட அறிவிப்பு வெளியாகியதைத் தொடர்ந்து யாழ். மக்களை மட்டக்களப்பில் இருந்து வெளியேறுமாறு கருணா குழு மிரட்டியதும் பின்னர் எதிர்ப் புக்கள் அதிகரித்த நிலையில் தாம் அவ்வாறு மிரட்டவில்லை எனத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## நடக்க இருக்கும் தேர்தல் குறித்து யாழ்.பல்கலை விரிவுரையாளர்-புலிகள் கருத்துப்பரிமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நடக்க இருக்கும் பொதுத் தேர்தல் பற்றி யாழ். பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், போராசிரியர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக் குமிடையில் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக பொருளியல் பீடத்தலைவர் போராசிரியர் சிவநாதன் தலைமையில் பல்கலைக்கழக விரிவுரையாளர் மண்டபத்தில் இச்சந்திப்பு இடம் பெற்றது.

போராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை, பீடாதிபதிகள், விரிவுரையாளர்கள் அனைவரும் கலந்துகொண்டனர். தமிழீழ விடுதலைப்புலிகள் தரப்பில் நீதிநிர்வாகத்துறைப் பொறுப்பாளர் இ.பரா, யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் இளம்பரிதி மற்றும் கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில் தேர்தல் குறித்து பலரும் தத்தமது கருத்துக்களை வெளிப்படுத்தினர்.

இதில் விரிவுரையாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்;

வாக்காளர்கள் அதிகபடியாக வாக்களிக்க வேண்டும் என்றும் எமக்கு தெரிவு செய்யப்படும் ஆட்களல்ல முக்கியம், தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆசன எண்ணிக்கை வடக்கு-கிழக்கு

(08ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்புக்கு வாக்களிக்க முன்னாள்அமைச்சர் மகேஸ்வரன் கோரிக்கை

தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையைத் தீர்க்கும் விதத்திலும் புலிகளின் கையைப் பலப்படுத்தும் விதத்திலும் யாழ் மாவட்ட மக்கள் அனைவரும் திரண்டு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பினரைபாராளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்என முன்னாள் அமைச்சர் தி. மகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசு- புலிகளுக்கிடையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மூலம் உருவான சமாதானப் பேச்சுக்கள் செம்மையான வழியில் நகர்ந்து கொண்டிருந்த வேளையிலும், தமிழ் மக்களுக்கு ஆக்கபூர்வமான தீர்வுகளைத் தரக்கூடியஇடைக்கால நிர்வாக சபைத் திட்டவரைபு கையளிக்கப் பட்ட நிலையிலும் சனாதிபதியால் அறிவிக்கப்பட்டுள்ள இந்தத்தேர்தல் அறிவிப்பானது தமிழ் மக்களுடைய அரசியல் எதிர் காலத்தைப் பின்தங்கச் செய்துள்ளது.

இதனை யாழ். மாவட்ட மக்கள் உணர்ந்து கொண்டு குள்ளத்தனமாக அரசியலை நடத்த முயலும் தேசவிரோதசக்திகளை நிராகரித்து கூட்டமைப்பினரை ஆதரிப்பதன் மூலம் எதிர்காலத்தை எமது இயக்கத்துக்குச் சாதகமாக்குவோம் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மகேஸ்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### கணினி பயிற்சி

பாடசாலை மாணவர்களின் விடுமுறையைப் பயனுள்ள முறையில் கழிக்க விசேட கணினி பயிற்சி நெறி. 40 நாட்கள் மட்டுமே. கட்டணம் 750/= மட்டுப் படுத்தப்பட்ட அனுமதிகள். ஆரம்பம்:- 03.04.2004 காலை 9.00 மணி. தொடர்புகளுக்கு:- DB TECH 155ம் கட்டை, கிளிநொச்சி. (4407)

### அமுதன் கல்வி நிலையம்

புதுக்குடியிருப்பு

A/L 2006 இற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது.
கலைப்பிரிவு:-03.04.2004 பி.ப.3.00 மணி.க.பொ.த (சா/த) மீட்டல் 03.04.2004 பி.ப.3.00 மணி (வழமையான ஆசிரியர் குழுவினர்)
(4065)

### உயர்தர வகுப்புக்கள் ஆரம்பம்

(பொன்னம்பலம் வைத்தியசாலை பரவிப்பாஞ்சான்)க.பொ.த (உ/த)வகுப்புக்கள் 2006ஆம் ஆண்டுக்கான கணித, விஞ்ஞான .கலை வர்த்தக பிரிவுகள் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களைக் கொண்டு 31.03.2004 புதன்கிழமை மாலை. 4.00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. என்பதனை அன்புடன் அறியத் தருகின்றோம். நிர்வாகி.
(4405)

### Science Hall

புதுக்குடியிருப்பு

A/L 2006ற்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றது.
வர்த்தகப்பிரிவு- 03.04.2004பி.ப.3.00
விஞ்ஞானப்பிரிவு- 03.04.2004 காலை.8.00 மணிக்கு(வழமையான ஆசிரியர் குழுவினர்) (4066)


## கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

நீலியாவத்தை புலோலியை சேர்ந்த கதிர்காமத்தம்பி பாலகணேசன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் 2004 க்குரிய வரிப்பத்திரங்கள், சாரதிஅனுமதிப் பத்திரம் மற்றும் உடுபுடவைகள் அடங்கிய கைப்பை(பாக்) கண்டெடுக்கப் பெற்று கிளிநொச்சி ஈழநாதம் விளம்பரப் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அலுவலக நேரத்தில் சமுகம் கொடுத்து பெற்றுக் கொள்ளவும். (சோ)

## பெறுபேறுகள்

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த(சா.த) பரீட்சை உடையார் கட்டு மகாவித்தியாலய மாணவர்கள் பெற்ற சிறந்த பொறுபேறுகள் வருமாறு.சி.விஜயபாலன்-10A, கு.குணநேசன்- 04A,05B, ம.அருனிசா-04A,03C,02S, ஜெ.யுடிஸ்ரொட்சன்-03A,03B,03C, த.தர்மநாத் A,03B, 04C, சி.றமணி-A,03B,03C,02S. (26)

# வரணி வடக்கு அரசினர் த.க.பாடசாலை வளவினுள் மீண்டும் காவலரண்கள்

## பாடசாலையை இயக்கும் நடவடிக்கை பாதிப்பு

தென்மராட்சியில் உள்ள வரணி வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வளவினுள் படையினர் மீண்டும் புதிய காவலரண்களை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற்படி பாடசாலையை நீண்ட காலமாகத் தமது முகாமாகப் பயன்படுத்தி வந்த படையினர் அரசு-புலிகளுக்கிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் அண்மையில் அதில் இருந்து அகன்றிருந்தனர். இதனையடுத்து இப்பாடசாலையை இயக்குவதற்குரிய நடவடிக்கை தற்பொழுது படிப்படியாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மீண்டும் படையினர் அப்பாடசாலை வளாகத்தினுள் காவலரண்களை அமைக்கத் தொடங்கியுள்ளமை பாடசாலையை மீள இயக்கும் நடவடிக்கைகளைப் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாக பாடசாலை நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர் (33)

## வாக்களிப்புக்குச் செல்லும் உந்துருளிகளுக்கு பெற்றோல்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ம் திகதி நடைபெறவிருக்கும் சிறிலங்காவிற்கான பாராளுமன்றத்தின் 13வது பொதுத் தேர்தலில் உந்துருளியில் (மோட்டார்சைக்கிள்) ஓமந்தை வாக்குச் சாவடிக்கு வாக்களிக்கச் செல்லும் வாக்காளர்களுக்கு முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட சகல ப.நோ.கூ. சங்கங்களின் எரிபொருள் நிலையங்க ளில் கட்டுப்பாட்டு விலையில் மூன்று லீற்றர் வீதம் பெற்றோல் வழங் கப்படுமெனவும் இப்பெற்றோலினை பெற்றுக்கொள்வதற்கு உந்துருளியின் ஆவணங்களையும், வாக்காளர் அட்டையினையும், காண்பித்து 31, 01ம் திகதிகளில் பெற்றோலினை பெற்றுக்கொள்ளலாம் என ப.நோ.கூ.சங்கங்களின் பொது முகாமையாளர்கள் தெரிவிக்கின்றனர். (20)

## மல்லாவி பிரதேசத்தில் தேர்தல் கருத்தரங்கு

(மல்லாவி)

மல்லாவி பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை 5.00 மணிக்கு தேர்தல்க் கருத்தரங்கு இடம்பெற்றது மல்லாவி வர்த்தக சங்கத் தலைவர் தி.தர்மலிங்கம் தலைமையில் மல்லாவி வாக்காளர்களுக்கும் பொது அமைப்பினருக்குமாக இடம்பெற்ற கருத்தரங்கில் முல்லைமாவட்ட பெண்கள் மேன்பாட்டுப் பொறுப்பாளர் க.அன்பரசிவர்த்தகசங்கச் செயலாளர் தனுராஜ் அரசியல்துறையைச் சேர்ந்த பெ.தனம் ஆகியோர் நிகழ்த்தினர். (24)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் அவசரகலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு கிழக்கு மாகாண பகுதி நேர ஆங்கில ஆசிரியர் சங்கத்தின் அவசரகலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.நிரந்தர நியமனம் தொடர்பாக எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் மற்றும் முக்கிய விடயங்கள் குறித்து இன்று கலந்துரையாடப்படவுள்ளதால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்துப்பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் இக்கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும் வண்ணம் வடக்கு கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கத் தலைவர் எஸ்.ஞானகரன் வேண்டுகைவிடுத்துள்ளார். (சோ)


## துயர்பகிர்வோம்

அமரர்

### செ.பத்மநாதன்

அவர்கள்

*எமது வித்தியாலய ஆசிரியர் திரு.ப.ராகுலன் அவர்களின் அன்புத்தந்தை செல்லத்துரை பத்மநாதன் அவர்கள் அகால மரணமடைந்ததை அறிந்து நாமும் துயருறுகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரது துயரில் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

அதிபர், ஆசிரியர்கள்
பணியாளர், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.
மு. உடையார்கட்டு ம.வி
(4064)



உ
சிவமயம்

"நாகதம்பிரான் நல்லருள் நாடெங்கும் பாலிக்குக"

கரைச்சி

## புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயஉற்சவப் பொங்கல்

(04-04-2004)

### தண்டல் ஒழுங்கிற்கான அறிவித்தல்

மேற்படி பொங்கல் விழாவைமுன்னிட்டு 30.03.2004 தொடக்கம் வட்டக்கச்சி, இராமநாதபுரம்,கல்மடு, விசுவமடு,புன்னை நீராவி,பிரமந்தனாறு, தொட்டியடி, உடையார்கட்டு,தேவிபுரம், சுதந்திரபுரம் ஆகிய பகுதிகளுக்கு ஆலயச் சின்னம் பொறிக்கப்பட்ட கொடிகள், பற்றுச்சீட்டுக்களுடன் உழவு இயந்திரங்களில் வருகை தரவுள்ளதால் மக்கள் தங்கள் நேர்த்திப்பொருட்களை வழங்கி பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

ஆலய பரிபாலனசபை

(சி.9431)

## மாட்டிறைச்சியின் கொள்வனவு, விற்பனை விலைகளில் மாற்றம்

**நடைமுறையிலுள்ள மாட்டிறைச்சிக் கொள்வனவு, விற்பனை விலைகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளமையைத் தொடர்புடைய அனைவருக்கும் இதனால் அறியத்தருகின்றோம்.**

| | தற்போது | 01.04.2004 இல் இருந்து |
|---|---|---|
| **கொள்வனவு விலை** | | |
| உயிர் நிறை ஒரு கிலோ கிராம் | 50/= | 65/= |
| **விற்பனை விலை** | | |
| எலும்புடன் இறைச்சி | 90/= | 105/= |
| தனி இறைச்சி | 105/= | 125/= |

*மாடுகளை விற்பனை செய்வோரை மருதம் வாணிபக் கிளைகளுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்*

(4410)

ஆளுகை
மருதம் வாணிபம்

## துயர் பகிர்கிறோம்

### மருதையீனார்-மருதலிங்கம்

துணுக்காய் பகுதி ப.நோ.கூ. சங்கம் காசாளர் பிரிவு பத்மநாதன் அவர்களின் தந்தையார் திரு. மருதையீனார் -மருதலிங்கம் அவர்கள் 27.03.2004 அன்று காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினரின் துயரில்நாமும் பங்குகொள்வதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

*அங்கத்தவர்கள்:பணியாளர்கள்,பணிப்பாளர்கள், சக பணியாளர்கள், ப:நோ.கூ. சங்கம்துணுக்காய். (4119)*

## புதுக்கடைத் திறப்பு விழா

31.03.2004 அன்று 11.30 மணியளவில் கனகபுரம் தெரு கிளிநொச்சியில் (வன்னி செல்வன்)எரிபொருள் உதிரிகள் வாணிபம் திறப்புவிழா நடைபெற உள்ளதால் அனைத்து வாடிக்கையாளர்,அன்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்

கனகபுரம்தெரு.
கிளிநொச்சி

உரிமையாளர்
கு.குணபாலன்

(4408)

# புகலிடம் கோருவோரை தடுக்க புதிய திட்டம் ஐரோப்பிய நாடுகள் விரைவில் கூடித் தீர்மானம்!

## -அகதிகள் நலன்பேணும் அமைப்புக்கள் அதிர்ச்சி

**அகதி அந்தஸ்து கோருபவர்களுக்கு புகலிடம் வழங்குவதை தடுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய சட்டங்களையிட்டு அதிர்ச்சி வெளியிடப்பட்டுள்ளது. அத்தோடு இதனை கைவிடு மாறும் கோரப்பட்டுள்ளது.**

ஐரோப்பிய ஒன்றியநாடுகள் தமது நாடுகளுக்குள் புகலிடம் கோரி நுழையும் குடியேறிகளை தடுக்கும் வகையில் இறுக்கமான சட்டங்களை கொண்டுவர முடிவு செய்துள்ளது.

ஐரோப்பிய ஒன்றிய வெளிவிவகார அமைச்சர்கள் பெல்ஜியத்தில் எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக கூடி இது தொடர்பாக ஆராயவுள்ளனர்.

புகலிடம்கோரும் உரிமை யாருக்கு உள்ளது. அதற்கான விண்ணப்பங்களை எவ்வாறு கையாளலாம். தற்பொழுது புகலிடம் கோரி தஞ்சமடைந்துள்ளவர்கள் விடயத் தில் எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பது என்பதையிட்டு இவர்கள் தீர்க்கமான முடிவொன்றை எடுக்கவுள்ளனர். இதற்கமைய புகலிடம் கோருவோருக்கு எதிராக புதிய சட்டங்களும் கொண்டுவரப்படவுள்ளன.

இந்த சட்டங்கள் அங்கீகரிக்கப்படும் பட்சத்தில் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் தஞ்சமடைந்துள்ள பிறநாடுகளின் அகதிகள் அவர்களின் சொந்த நாடுகளுக்கு திருப்பியனுப்பப்படவேண்டியிருக்கும் என்று அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் புதிதாக அகதி அந்தஸ்துக்கோரி உள்நுழைவோரும் தடுக்கப்படுவதோடு, அவர்கள் மீது உடனடிநடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும் வழியமைக்கப்படும்.

இந்நிலையில், உத்தேச சட்டங்களை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தல்களும் எழுந்துள்ளன. மனித உரிமை அமைப்புக்களும் அகதிகளின் நலன்களுக்காகப் போராடும் நிறுவனங்களும் இவ்வாறான அழுத்தங்களை பிரயோகித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விசாரணைக்கு ஏற்பாடு

தாய்வானின் சனாதிபதி தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சி வேட்பாளர் தாக்கல் செய்த மனுவை ஆராய தாய்வான் மேல் நீதிமன்றம் மூன்று நீதியரசர்களை நியமித்துள்ளது.கடந்த 20 ஆம் திகதி நடந்த தேர்தலில் சனாதிபதி சென்சூஜிபியான் மோசடி செய்து வெற்றி பெற்றதாக குற்றம் சாட்டப்பட் டுள்ளமை தெரிந்ததே.

# அயர்லாந்தில் புகைத்தல் தடை; உலகில் முதல் நடவடிக்கை!

அயர்லாந்து அரசாங்கம் புகைத்தலை முற்றாகத் தடைசெய்துள்ளது.

அயர்லாந்தின் கேளிக்கை விடுதிகளிலும் மதுபானச் சாலைகளிலும் புகைத்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் நாட்டின் பொது இடங்களில்புகைத்தலைத் தடைசெய்யும் முதலாவது நாடு என்ற பெருமையை அயர்லாந்து பெற்றுள்ளது.

இதேவேளை இத்தகைய சட்டதிட்டங்கள் அமெரிக்காவின் கலிபோர்னியா, நியூயோர்க் போன்ற மாநிலங்களில் அறிமுகப்படுத்தப்பட்டாலும் தேசிய அளவிலான புகைத்தல் தடையின் அமுலாக்கம் முதன்முதலில் அயர்லாந்திலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த சட்டதிட்டங்களை மீறுவோர் மூவாயிரம் யூரோக்களை அபராதமாகச் செலுத்தவேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




வியன்னாவிலுள்ள எண்ணெய் உற்பத்தி நாடுகளின் தலைமைக் காரியாலயம். அண்மையில் நாளொன்றுக்கு ஒரு மில்லியன்பெரல் எண்ணெய்யைகுறைத்துஉற்பத்திசெய்ய இணக்கம் காணப்பட்டுள்ளது.

# 7 கிழக்கு ஐரோப்பிய நாடுகள் நேட்டோவில் புதிதாக இணைவு

## ரஷ்யா இதனையிட்டு விசனம்

கிழக்கு ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த ஏழுநாடுகள் நேட்டோவில் சேர்ந்துள்ளன.

அமெரிக்காவில் நடந்த விழாவில் எஸ்தோனியா, லத்வியா, லித்வேனியா, பல்கேரியா,ருமேனியா, சிலோவாக்கியா, சுலோவேனியா ஆகிய ஏழுநாடுகளே நேட்டோவில் இணைந்து புதிய அங்கத்துவத்தைப் பெற்றுள்ளன.

இதேவேளை புதிதாக இந்த ஏழு நாடுகளும் இணைந்ததன் மூலம் நேட்டோவில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளின் எண்ணிக்கை இருபத்தாறாக அதிகரித்துள்ளது.

அமெரிக்காவின் கூடுதல் செல்வாக்கைப்பெற்ற இந்த அமைப்பு கிழக்கைரோப்பியப் பிராந்தியத்தை நோக்கி விஸ்தரிக்கப்பட்டுள்ளமை ரஷ்யா வின் ஆத்திரத்தைக் கிளப்பி உள் ளது.

நேட்டோவில் அங்கம் வகிக்கும் நாடுகளில் 40 சதவீதமான நாடுகள் முன்னாள் கம்யூனிஸ்ட் நாடுகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத்திற்கு எதிராக போராட புஷ் அழைப்பு

(வாஷிங்டன்)

நேட்டோவில் இணைந்த ஏழு கிழக்கைரோப்பிய நாடுகளையும், ஈராக் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான பேர் போன்றவற்றில் ஐக்கியத்துடன் செயற்படவேண்டுமென அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் வேண்டுகோள் விடுத்துள்ளார். அதேவேளை நேட்டோவில் இணைந்த இந்த ஏழு கிழக்கை ரோப்பிய நாடுகளுக்கும் சம அந்தஸ்த்தை வழங்கப் போவதாகவும் புஷ் மேலும் தெரிவித்துள்ளார்.




பொஸ்டன் நகருக்கு ஜோர்ஜ் புஷ் வருகை தருவதை முன்னிட்டு அண்மையில் அங்கு நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது ஈராக்கினதும், பலஸ்தீனத்தினதும், கெயிட்டியினதும் தேசியக் கொடிகளை போர்த்தி ஆர்ப்பாட்டம் நடத்தியோர்.

# அரச படையினர் எதிர்க்கட்சியினர் மோதல் ஐவரிகோஸ்ட்ரில் 70பேருக்கு மேல் பலி!

(அபிட்ஜான்)

ஐவரிகோஸ்ட்டிரின் தலைநகரில் கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்ற வன்முறைகளின்போது 73 பேராவது பலியாகியிருக்கலாமென அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அபிட்ஜானிலுள்ள இரண்டு பிரதான பல்கலைக்கழக வைத்தியசாலைகளின் சவச்சாலைகளில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தெரிவிக்கையில்: துப்பாக் கிச்சூட்டுக்காயங்களுடன் 67சடலங்கள் கொண்டு வரப்பட்டதாக கூறியுள்ளனர்.

ஐவரிகோஸ்ட்ரின் வடபுலத்தைச் சேர்ந்தோரும், புலம்பெயர்ந்தோரும் வசிக்கின்ற வறிய பிரதேசத்தில் மேலும் சில சடலங்கள் கிடக்கலாமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் பிரதேசம் எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ஆதரவுள்ள தளம் என சனாதிபதி லோறன்ஸ் காபாலோ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினர் அரச படைகளால் தாக்கப்பட்டதை அடுத்தே வன்முறைகள் வெடித்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

# நேபாளத்தில் போர்நிறுத்தம்; ஐ.நா.வின் கோரிக்கை நிராகரிப்பு

(காத்மண்டு)

நேபாள மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுடனான சண்டை நிறுத்தத்தினைக்கோரி ஐ.நா.சபை விடுத்துள்ள அழைப்பை நேபாள அரசு நிராகரித்துள்ளது.

மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை மீண்டும்பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் அவர்கள் மீண்டும் கூட்டாகச் சேர்வதற்குஇந்தவாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நேபாள அரசு பேச்சுவார்த்தைகளை நிராகரித்துள்ளது.

இதனை நேபாள உள்துறை அமைச்சர் கமல்ஷபா காத்மண்டுவில் தெரிவித்தார்.

மாவோ தீவிரவாதிகளால் ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். தற்போதைய மாவோ பிரச்சினையை எந்தவித அமெரிக்க மத்தியஸ்தம் இல்லாமலும்தீர்க்கவிரும்ப வில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.



மேற்குக்கரை ஹெப்றோன் நகரில் 'அல்லாஹ்' என்ற அரபு வாசகத்துடன் பிறந்த செம்மறியாட்டுக்குட்டியைப் பார்வையிடும் பலஸ்தீனர்கள்.

# ஜோர்ஜியா பொதுத் தேர்தலில் சனாதிபதி தலைமையிலான கூட்டமைப்பிற்கு வெற்றிவாய்ப்பு!

ஜோர்ஜியாவில் கடந்த வார இறுதியில் நடந்த பொதுத்தேர்தலில் ஜோர்ஜியாவின் சனாதிபதி மிக்கெயில் ராக்கெஸ்வில்லியின் கூட்டணி அமோக வெற்றி ஈட்டுமென உறுதியாக நம்பப்படுகிறது. இதுவரை எண்ணப்பட்ட 20சத வீதவாக்குகளின் அடிப்படையில் ராக்கெஸ்வில்லியின் தேசிய சனநாயக அமைப்பு 75 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்கின்றது.

இதேவேளை சனாதிபதி ராக்கெஸ்வில்லி ஊழலை ஒழித்து அரசாங்கத்தின் கஜானாக்களை நிரப்புவதற்காக பல சட்ட திட்டங்களை அறிமுகப்படுத்தினார்.

அவற்றிற்குக் கடும் எதிர்ப்புகள் அப்போது எழுந்தபோதிலும் தற்போதைய தேர்தல் முடிவுகள் இந்தமுயற்சிகளுக்குச் சார்பானவையாகவே அமைந்திருக்கின்றன.

கடந்த ஆண்டு இரத்தம் சிந்தாப் புரட்சியின்மூலம் எட்வார்ட் செவனாட்சேயை பதவியில் இருந்து ராக்கெஸ்வில்லி கவிழ்த்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சதாமிற்காக வாதாட பிரான்ஸ் சட்டத்தரணி தயார்


ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாமிற்கு ஆதரவாக நீதி மன்றத்தில் வாதாடப் போவதாக பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த வழக்கறிஞர் ஒருவர் தெரிவித்துள்ளார்.சதாம் பிடிபட்டவேளை அவரை ஏதோ விலங்கு ஒன்றை கால்நடை வைத்தியர்கள் பரிசோதிப்பதனைப் போன்று அமெரிக்கப் படையினர் பரிசோதித்ததாக அவர் மேலும் குற்றம் சாட்டியுள்ளார்.

# கடந்த வாரத்தில்....

## 22.03.2004 - 28.03.2004

**22** * களனிதிஸ்ஸ அனல் மின்நிலையத்தில் தீ விபத்து. நாசவேலையென சந்தேகம்.

* ஆப்கானிஸ்தான் எல்லையோரமாக பாகிஸ்தானின் மேற்குப்பகுதி வனா என்ற இடத்தில் பாகிஸ்தான் இராணுவமுகாம் ஒன்றின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 30 பாகிஸ்தான் படையினர் பலி.


அகமத் ஜாஷீன்

*பலஸ்தீனத்தின் காஸாப் பகுதியில் ஹமாஸ் இயக்கத்தின் ஆன்மீகத் தலைவரும் ஸ்தாபகருமான ஷேக் அகமத் ஜாஷீன் இஸ்ரேலியர்களின் ஹெலிகொப்டர் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

**23** * தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளரை சந்தித்த இலங்கைக்கான உலக வங்கிப்பிரதிநிதி பீற்றர் கரோல், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் அடங்கிய குழுவினர் மனிதாபிமான மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாகவும் அதற்கான நிதித் தேவையை வழங்குவது மற்றும் பெறுவது தொடர்பாகவும் ஆராய்ந்தனர்.


ஆராய்வு.....

* கிழக்குப் பல்கலைக்கழக பீடாதிபதி கலாநிதி எஸ். திருச்செல்வம் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தார்.

* ஹமாஸ் இயக்கத்தலைவர் படுகொலையை ஆட்சேபித்து உலகின் பல பகுதிகளில் முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்.


முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டம்

* 2001 செப்ரெம்பர் 11 இல் அமெரிக்காவில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பாக தேசிய ஆணைக்குழுவின் முன்பாக வாஷிங்டனில் இராஜாங்க அமைச்சர் கொலின்பவல் பிரதி இராஜாங்க அமைச்சர் 'ரிச்சர்ட் ஆர்மிரேஜ் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

**24** *இந்தியா- பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் போட்டியில் இந்திய அணி 40 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரையும்3-2 என்ற அளவில் வெற்றி கொண்டது.

* வடமராட்சி கடற்பரப்பினுள் அதிகாலையில் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் அங்கு தொழிலில் ஈடுபட்டிருந்த வடமராட்சி மீனவர்கள் மீது காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தினர். இதனால் 3 இலட்சம் பேரிற்கும் அதிகமான சொத்திழப்பு ஏற்பட்டது.

* புல்மோட்டை கனிப்பொருள் கூட்டுத்தாபனம் மற்றும் அதன் உபகரணங்கள் வெளிநாட்டு நிறுவனம் ஒன்றிற்கு விற்பதற்கு நடவடிக்கை.அமைச்சரவை அங்கீகாரம்.

**25** *கருணாவை விட்டு விலகியிருக்குமாறு போராளிகளிடம் விடுதலைப்புலிகளின் தலைமை கோரிக்கை.

* ஒலிம்பியா நகரில் ஒலிம்பிக் தீபம் ஏற்றும் விழா நடைபெற்றது.

* யாழ்.கொக்குவில் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு ஆதரவாக பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த யாழ்.பல்கலைக்கழக மாணவர் மீது ஈ.பி.டி.பி தேசவிரோதிகள் நடத்திய தாக்குதலில் இருமாணவர்கள் படுகாயம்.


காயமடைந்த மாணவர்

**26*** குடாநாட்டில் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையப் பிரதிநிதிகள் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதியுடன் கலந்துரையாடினர்.

* ஈ.பி.டி.பி.யினர் யாழ்.இல் மேற்கொள்ளும் சுதந்திரமான தேர்தலுக்கு குந்தகம் விளைவிக்கும் நடவடிக்கைகளுக்கு யாழ். மாவட்ட அரசியல்துறை கண்டனம்.

* பருத்தித்துறை முனைப்பகுதியில் மீன்பிடிப்படகு மீது சிறிலங்கா கடற்படைப் படகு மோதியது. ஒருவர் காணாமல் போனார்.இருவர் படுகாயம்.

* ஈராக்கில் பலூஜா நகரில் இடம் பெற்ற தாக்குதலில் அமெரிக்கப் படையினர் 15பேர்பலி, 50பேர் படுகாயம்

* வாகனக் கண்ணிவெடியில் சிக்கி கிளிநொச்சி பரந்தனில் உழவு இயந்திரப் பெட்டி சேதம். சம்பவத்தில் மூவருக்குப் படுகாயம் ஏற்பட்டது.


சின்னாபின்னமான இழுவைப் பெட்டி



**27*** மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபரும் தெரிவத்தாட்சி அதிகாரியுமான தி.மோனகுருசாமி இனம்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயம் அடைந்துள்ளார்.



*முன்னாள் இந்து கலாச்சார அமைச்சரும், பாராளுமன்ற உறுப்பினரும் தற்பொழுது கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.க. சார்பில் போட்டியிடுபவருமான தி.மகேஸ்வரன் இனந் தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்.

* புதுக்குடியிருப்பு மாத்தளன் வீதியில் ஹையேஸ் வாகனம் தடம் புரண்டதில் அதன் சாரதி மரணம்.

*யாழ்.பல்கலைக்கழகத்தின் 23வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் ம.சிவசூரியா தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

* வடமராட்சிக் கடற்பரப்பில் கடற்படைப் படகு மோதியதில் காணாமல் போன மீனவர் சடலமாக மீட்பு.

**28*** ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் (சூரியன் வானொலி) பணிப்பாளர் ரோனே சில்வாவின் வீட்டில் கைக்குண்டு வீசப்பட்டதால் ஒருவர் காயமடைந்தார்.

* ஆனையிறவுக்கும் பரந்தனிற்கும் இடையே ஏ-9 நெடுஞ்சாலையில் இடம் பெற்ற பாரஊர்தி, உந்துருளி விபத்தில் உந்துருளியில் சென்றவர் மரணம்.

* வடமராட்சி பகுதியில் பொலிசாரின் பாதுகாப்புடன் தேர்தல் பிரச்சாரத்திற்கு சென்ற ஆனந்தசங்கரியின் சுயேட்சைக் குழு வேட்பாளர்கள், ஆதரவாளர்கள் பருத்தித்துறையிலிருந்து மக்களால் வல்வை வெளிக்கப்பால் விரட்டியடிப்பு.

# முல்லை மாவட்ட வாக்காளருக்கு ஓமந்தையில் 49 வாக்குச் சாவடிகள்

## சாவடி இலக்கங்களும் அறிவிப்பு

முல்லைதீவு மாவட்ட வாக்காளர்களுக்காக ஓமந்தைப் பாடசாலை மைதானத்தில் 49வாக்குச் சாவடி அமைக்கப்படவுள்ளதாகவும் யாழிலிருந்து இடமபெயர்ந்தோருக்காக இரண்டு வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாகவும் வன்னித் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலரும் வவுனியாமாவட்ட அரசாங்க அதிபருமான கே. கணேஸ் தெரிவித்தார்.

தேர்தல் அலுவலர்களுக்காக கடந்த ஞாயிறன்று முல்லைத் தீவு மகாவித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்ற பயிற்சி நிகழ்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் கூறுகையில், மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு கிராம அலுவலர்கள் உதவ வேண்டும். ஆரம்பத்திலேயே முல்லை மாவட்ட அரச அதிபரினால் வழங்கப்பட்ட இலக்கங்களுக்கேற்ப மக்களை தயார்ப்படுத்தி அனுப்பப்பட வேண்டும். அவ் இலக்க ஒழுங்குகள் வருமாறு, அம்பாள்குளம் -01, வவுனிக்குளம் -02, பாண்டியன்குளம் -03, நட்டாங்கண்டல் -04, வினாயகபுரம் -05, துணுக்காய் அ.த.பா-06,உயிலங்குளம் அ.த.க.பா-07,மல்லாவி ம.வி-08,யோகபுரம் ம.வி-09, அம்பலப்பெருமாள் குளம்-10, புத்துவெட்டுவான்-11,புதுக்குடியிருப்பு ம.வி-12, இரணைப்பாலை றோ.க.ம.வி-13, புதுக்குடியிருப்பு சிறிசுப்பிரமணிய வித்தியாலயம-14,வளளிபுனம-15,உடையார்கட்டு-16,விசுவமடு ம.வி-17, வள்ளுவர்புரம்-18, முத்தையன்கட்டு இடதுகரை-19, கற்சிலைமடு-20,ஒட்டுசுட்டான் ம.வி-21,சின்னத்தம்பி பாடசாலை-22, கரிப்பட்ட முறிப்பு அ.த.க.பா-23,ஒலுமடு அ.த.க.பா-24, மாங்குளம் ம.வி-25, திருமுறிகண்டி-26, ஒதியமலை அ.த.க.பா-27,தண்டுவான் அ.த.க.பா-28,கொக்குளாய் அ.த.க.பா-29,கொக்குத்தொடுவாய் அ.த.க.பா-30, செம்மலை ம.வி-31, அளம்பில் றோ.க.வி-32, சிலாவத்தை றோ.க.வி-33,கள்ளப்பாடு அ.த.க.பா-34, முல்லைத்தீவு அ.த.க.பா-35, முல்லைத்தீவு றோ.க.வி-36, முல்லைத்தீவு ம.வி-37, வெள்ளாமுள்ளி வாய்க்கால்-38, வட்டுவாகல் அ.த.க.பா-39, முள்ளிவாய்க்கால் மேற்கு அ.த.க.பா-40, அ/பொக்கணை அ.த.க.பா-41, வற்றாப்பளை ம.வி-42, முள்ளியவளை அ.த.க.பா-43, வித்தியானந்தாக் கல்லூரி-44, மாமூலை கி.அ.ச-45, தண்ணீரூற்று முஸ்லிம் ம.வி-46, கணுக்கேணி-47, தண்ணீரூற்று இ.த.க.பா-48, குமுழமுனை-49.

இந்த இடங்களுக்கு வழங்கப்பட்ட இலக்கங்களின் அடிப்படையில் வாக்கெடுப்பு நடைபெறும். எனவே இந்த இலக்கங்களுக்குரியவர்கள் அந்தந்த இடங்களில் மக்கள் சுதந்திரமாக வாக்களிப்பதற்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றுதெரிவித்தா. (20)

# மூவேந்தர் முன்பள்ளியில் விளையாட்டுப்போட்டி

துணுக்காய் யோகபுரம் மத்திய மூவேந்தர் முன்பள்ளியில் 2004 ஆம் ஆண்டுக்கான சிறார்களின் விளையாட்டுப்போட்டி நிகழ்வு மு.ஜெயதீஸ்வரன் தலைமையில் கடந்த ஞாயிறன்று பி.ப. 2.30 மணிக்கு இடம் பெற்றது. மங்கல விளக்கினை துணுக்காய் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை துணைச்செயலாளர் த. சுந்தரலிங்கம் மல்லாவி மத்திய கல்லூரியின் நூலகப் பொறுப்பாளர் றுயினா ஆகியோர் ஏற்றிவைத்தனர். தமிழீழத் தேசியக்கொடியை துணுக்காய் பிரதேச அரசியல்துறைப் போராளி செல்வன் க.இசைப்பிரியன் ஏற்றிவைக்க மேற்படி விளையாட்டுப்போட்டியில் சிறார்களின் 40 விளையாட்டு நிகழ்வுகள் இடம் பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யோகபுரம் மாகாவித்தியாலய அதிபர் திருமதி ப.கிருஸ்ணபிள்ளை. கிராமசேவையாளர் மங்களேஸ்வரி கனகரட்ணம், துணுக்காய் பாண்டியன் குளம் அபிவிருத் திக்கழக இணைப்பாளர் ஜீவகருணியம் ஆகியோரால் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவித்தனர்.(24)

-தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி-

# யாழ்.பல்கலை மாணவர்கள் தேர்தல் குறித்து தெளிவூட்டல்

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தி யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் கிளிநொச்சி மாவட்டத்தின் பலபகுதிகளில் தேர்தல் தொடர்பான தெளிவூட்டல் கருத்துப் பகிர்வுகளை மக்களுக்கு பரவலாக வழங்கிவருகின்றனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரும் கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்பக்கல்வி நிறுவன மாணவர் ஒன்றியத்தினரும் ஒன்றிணைந்து கடந்த சனி,ஞாயிற்றுக் கிழமைகளில் திருவையாறு 1ஆம்,2ஆம்,3ஆம் பகுதிகளிலும் கனகாம் பிகைக் குளம் பகுதிகளிலும், உருத்திரபுரம் பகுதியிலும் தமிழ்த் தேசியத்தை முன்னிலைப்படுத்தி தேர்தல் கருத்துப் பகிர்வுகளை நடத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது. (15)

# மீன் முள்ளு தொண்டையில் சிக்கி பெண் ஒருவர் பரிதாபமரணம்

மீன் முள்ளு தொண்டையில் சிக்கியதால் குடும்பப் பெண்ஒருவர் மரணமானார்.கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த தங்கராசா மரியறோஸ் (வயது 45) என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.இவர் கடந்த சனிக்கிழமை மதிய உணவை உண்டவேளை மீன்முள்ளு அவரது தொண்டைக்குள் சிக்கியது. இதனையடுத்து இவர் யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டபோதும் அவர் பரிதாப மரணமடைந்தார்.

# கடும் வெப்பம் காரணமாக நாய்களுக்கு வெறிநோய்

(மன்னார்)

மன்னாரில் வெறிநாய் கடிக்கு இலக்காகி பலர் சிகிச்சை பெற்றுள்ளனர். மன்னாரில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக பல நாய்களுக்கு வெறிநோய் ஏற்பட்டு மக்களைக் கடிப்பதால் இந் நிலை தோன்றியுள்ளது.

இந் நாய்களை அழிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மன்னார் பிரதேச சபையினரை மக்கள் வேண்டியுள்ளனர். (மி)

# தமிழ்மக்களின் முன்னால் முக்கியமானதொரு தேர்தல் களம்!

தமிழ்மக்களைப் பொறுத்து இரு தினங்களில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் முக்கியத்துவம்மிக்க தொன்றாகி விட்டது. வேறு விதமாகக் கூறுவதானால் தமது தாயகம், தேசியம் என்பன குறித்து தமிழ் மக்கள் கொண்டுள்ள உறுதியான பற்றுறுதியை மீண்டும்ஒருதடவை வலியுறுத்தி வாக்களிக்க வேண்டிய ஒரு தேர்தலாக இத்தேர்தல் அமைந்துவிட்டது.

இனப்பிரச்சினைக்கு யுத்தத்தினால் தீர்வு காணமுடியாது என்பதும், விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முடியாது என்பதும் ஏற்கனவே நிரூபணமாகிவிட்ட நிலையில் இனப்பிரச்சினைக்குத் தமிழர் தாயகம், தேசியம் என்ற கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட தீர்வே சாத்தியமானதாக அமையும் என்பதை வலியுறுத்தும் வகையில் இத்தேர்தலைத் தமிழ் மக்கள் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

விடுதலைப் புலிகள்இயக்கத்துக்கும்- சிறிலங்காஅரசாங்கத்துக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டபோது சர்வதேச சமூகம் அதற்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கியது. ஆயினும், தமிழ் மக்களின் உணர்வுகள் எத்தகையவை என்பது குறித்து அறிந்துகொள்வதில் சர்வதேச சமூகம் ஆரம்பம்முதலே அக்கறைகொண்டிருந்தது. தமிழ் மக்கள் 1977இல் ஒருமித்த குரலில் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவளித்திருந்தனர். என்பது வெளிப்படையானதொன்றே. இதன் மூலம், தமிழர் தாயகம் , தேசியம் என்பன குறித்து தமிழ் மக்கள் ஏற்கனவே உறுதியான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தனர் என்பதும் வெளிப்படையானது.

ஆனால்,1977 ஆம்ஆண்டு அரசியல் இராணுவ ,பொருளாதாரச் சூழ்நிலை பெரும் மாற்றம் கண்டுள்ளதினால் தமிழ் மக்கள் தமது உணர்வுகளைமீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக 1977இல் இருந்த அரசியல் தலைமையானது மாற்றம் கண்டு ஆயுதப் போராட்டத்தை வழிநடத்திய தேசியத் தலைமை ஒன்று உருவாகியுள்ளது. அத்தோடு 1977ல் இருந்தது போன்று தமிழ் மக்கள் எதுவுமற்றவர்களாக கொள்கையோடு மட்டும் இன்று நிற்கவில்லை. அவர்கள் விடுவிக்கப்பட்டதொரு பிரதேசத்துடனும் பலம் பொருந்திய இராணுவக் கட்டமைப்புடனும் உள்ளனர். இதனைவிட தனியரசு ஒன்றை உருவாக்கத் தக்கதான கூட்டமைப்பு ஒன்றையும்கொண்டவர்களாக உள்ளனர். வேறு விதமாகக் கூறுவதானால், இன்று சிறிலங்கா அரசுடன் சமநிலையிலிருந்து பேச்சுவார்த்தை நடத்தக் கூடியதானதொரு நிலையிலுள்ளனர்.

***தமிழ் மக்கள் 1977இல் ஒருமித்த குரலில் தனி நாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவளித்திருந்தனர் என்பது வெளிப்படையானதொன்றே. இதன்மூலம், தமிழர் தாயகம் , தேசியம் என்பன குறித்து தமிழ் மக்கள் ஏற்கனவே உறுதியான நிலைப்பாட்டைக் கொண் டிருந்தனர் என்பதும் வெளிப்படையானது. ஆனால், 1977 ஆம்ஆண்டுஅரசியல் இராணுவ , பொருளாதாரச் சூழ்நிலை பெரும் மாற்றம் கண்டுள்ளதினால் தமிழ் மக்கள் தமது உணர்வுகளை மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.***

இவையாவும், இன்று சகலருக்கும் தெரிந்ததொன்றேயாயினும், தமிழ் மக்களின் உணர்வுகள் எத்தகையதாக உள்ளன என்பதை அறிந்துகொள்ள சர்வதேச சமூகம் ஆவலாக உள்ளது. ஏனெனில் தமிழ் மக்கள் குறித்து அவை தீர்க்கமான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளன.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகப் போவதில்லை என்பதும், சிறிலங்கா இராணுவம் விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியில் வெற்றிகொள்வது சாத்தியமில்லை என்பதும் அனைவருக்கும் தெரிந்ததொன்றே. அதே போன்று தமிழ் மக்களின் உணர்வுகளையே விடுதலைப் புலிகள் பிரதிபலிக்கின்றனர் என்பதும் அனைவராலும்விளங்கிக் கொள்ளக் கூடியதொன்றாக இருப்பினும், தேர்தல் மூலம் அதனை நிரூபணம் செய்ய வேண்டும் எனச் சர்வதேச சமூகம் எதிர்பார்க்கின்றது.

இவ்வாறான எதிர்பார்க்கைக்கு சிறிலங்கா அரசுகள் கடந்த காலத்தில் மேற்கொண்ட பிரச்சார நடவடிக்கைகளும், தமிழ் இன விரோதக் குழுக்கள் தமது சுய நலத்திற்காக தமிழ் மக்களின் உரிமைகளைப் பேரம்பேசத் தயாராக இருப்பதும் காரணமாகும். ஆகையினால், தமிழ் மக்கள் தமது தாயகம், தேசியம் என்பன குறித்து உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய கடப்பாடு உடையவர்களாக உள்ளனர்.

இந்த வகையில் சர்வதேச சமூகத்திற்குத் தமிழ் மக்களின் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது மட்டுமல்ல இன்றைய சூழ்நிலையில், தமிழ் மக்கள் மத்தியில் பிளவுகளையும், மோதல்களையும் உண்டாக்க முனையும் சக்திகளுக்கும், இனவிரோதிகளாக செயற்படுபவர்களுக்கு மக்கள் பாடம் புகட்டுவதற்கான வாய்ப்பாக இத்தேர்தலைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

அண்மையில் விடுதலைப் புலிகள் அமைப்பில் உடைவை ஏற்படுத்தும் நோக்கில் கருணாவைச் சில சக்திகள் பயன்படுத்த முற்பட்டன. இதன் பிரகாரம் கருணா தனித்தியங்கப் போவதாக அறிவிப்புச் செய்தார். இதன் விளைவாகக் கருணா விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டார்.

இது ஒரு வகையில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான சக்திகளுக்கு மகிழ்வூட்டும் சந்தர்ப்பமாகவே இருந்துள்ளது. அதாவது, விடுதலைப் புலிகள் அமைப்பிற்குள் உடைவை ஏற்படுத்தியதாக அவை மகிழ்ச்சி கொண்டாடின. ஆனால், இச்சக்திகளுக்கு கருணாவின் விலகலானது விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்திவிடப் போவதில்லை என்பதும்- மக்கள் விடுதலைப் புலிகள் பக்கமே உள்ளனர் என்பதையும் வெளிப்படுத்தக் கூடியதொரு அரிய சந்தர்ப்பமாகவும் இத்தேர்தல் உள்ளது. அதாவது மக்கள் தேர்தலைப் பயன்படுத்தி தமது தலைமைத்துவத்தை உறுதி செய்வதற்கான நல்லதொரு வாய்ப்பாகும்.

***தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மாறாகவும், தேசவிடுதலைப்போராட்டத்திற்கு மாறானதுமாகச் செயற்படும் இனவிரோதக் கும்பல்களுக்கும் இத்தேர்தல் மூலம் தமிழ் மக்கள் நல்ல பாடத்தைப் புகட்டுவதற்கான வாய்ப்புக் கிட்டியுள்ளது.***

அடுத்தாக தமிழ் மக்களின் உணர்வுகளுக்கு மாறாகவும், தேசவிடுதலைப் போராட்டத்திற்கு மாறானதுமாகச் செயற்படும் இனவிரோதக் கும்பல்களுக்கும் இத்தேர்தல் மூலம் தமிழ் மக்கள் நல்ல பாடத்தைப் புகட்டுவதற்கான வாய்ப்புக் கிட்டியுள்ளது. அதாவது உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளின் கைக்கூலியாகவும் ஏஜென்டாகவும் செயற்படும் தமிழ் இன விரோதக் குழுக்களுக்கும் நபர்களுக்கும் இத்தேர்தல் மூலம்மக்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

தற்பொழுது தேர்தலில் போட்டியிடும் தமிழ் இனவிரோதக் குழுக்களின் நடவடிக்கைகள் தமிழர் தாயகம், தேசியம் ஆகிய கோட்பாடுகளைச் சிதைவுறச் செய்வதே நோக்கமாகக் கொண்டதாகும். இதற்கு சில உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் பின்னணியில் இருப்பதோடு ,பெரும் தொகை நிதியினையும் அவை வாரியிறைத்துள்ளதாகவே தெரியவருகின்றது. தெரியவருகின்றது.

அவ்வாறு இல்லாது விடில், தங்களை ஏழைகள் எனவும் மக்களின் தொண்டர்கள் எனவும் சித்தரிப்போர் இத்தேர்தல் பிரச்சாரத்திற்கெனப் பெரும் தொகை நிதியை எங்கிருந்து பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது? நாளாந்தம் பத்திரிகைகளில் வெளிவந்த விளம்பரங்களிலிருந்தே இவ் இனவிரோதக் கும்பல்களுக்குப் பெரும் நிதிப்பாய்ச்சல் இடம்பெற்றுள்ளது வெளிப்படையானது.

இந்தநிலையில் இம்முறைத் தேர்தலானதுதமிழ் மக்கள் மத்தியில் பிளவுகளையும் மோதல்களையும் உண்டாக்க முனையும் சக்திகளின் நோக்கங்களை முறியடிப் பதற்கும் இனத்துரோகிகளின் சுயநலச் செயற்பாடுகளை முறியடிப்பதற்கும் இத்தேர்தலைத் தமிழ் மக்கள் பயன்படுத்திக் கொள்ள முற்படுதல் வேண்டும்.

இத்தேர்தலில் தமிழ் மக்கள் தமது தெளிவானதும், உறுதியானதுமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தாமல் போனால் ,அதாவது தேர்தலில் அக்கறைகாட்டாது போனால்,சில பாதகமானதும், எதிர்மறையான நிகழ்வுகள் கூட ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உருவாகிவிடும்.

அதாவது இனவிரோதச் சக்திகளும் பேரினவாதச் சக்திகளும் ஒன்றாகச் சேர்ந்து தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை நலிவுறச் செய்வதற்கு வாய்ப்பளிப்பதாகிவிடும். சர்வதேச சமூகமும் தமிழ் மக்களின் உரிமைகள் தொடர்பான விடயத்தில் உறுதியான நிலைப்பாட்டை மேற்கொள்ளவோ தமிழ் மக்களுக்கு ஆதரவான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கோ வாய்ப்பில்லாது போய்விடும்.

இதேவேளை தற்பொழுது நடைபெறவுள்ள தேர்தலானது, 1977இல் அமுலில் இருந்தது போன்றதான தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம் அல்ல. இது தேர்தல் மாவட்டத்தின் அடிப்படையிலான விகிதாசாரப் பிரதிநிதித்துவமாகும். இத்தேர்தல் முறையில் இனவிரோதக் குழுக்கள் கூட சில சமயங்களில் ஓரிரு ஆசனங்களைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உண்டு. அதாவதுதனிப்பட்டவர்களின் விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் உதிரிகளாகக் கிடைக்கும் சிதறல் வாக்குகளைக் கொண்டு ஒரு குறிப்பிட்டளவிலான திரட்டிய வாக்குகளைப் பெறுவதன் மூலம் ஓரிரு இடங்களைப் பெற்றுவிடலாம்.

ஆகையினால், இத்தேர்தலில் மக்கள் எந்தளவிற்கு அதிகரித்த தொகையில் வாக்களிப் பில் ஈடுபடுகின்றனரோ அதுவே இனத்து ரோகிகளையும், அடிவருடி களையும் சுயநல மிகளையும் ஓரங்கட்ட உதவுவதாக இருக்கும்.

இதனால், தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை ஒருமித்த குரலில் வெளிப்படுத்தும் ஒரு வாய்ப்பாக இத்தேர்தலை வெளிப் படுத்த வேண்டும். இதுவே தமிழ் மக்கள் தன்னாட்சி உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்கத்தக் கதாகவும்- தமிழ்மக்களின் எதிர்காலத்தை தீர் மானிப்பதாகவும் இருக்கும் எனின் மிகையாகாது.

**ஜெயராஜ்**

- கிளி. அரசாங்க அதிபர் பணிமனையில் -

## தேர்தல் வாக்களிப்பு குறித்து கிராம சேவையாளருக்கு விளக்கம்

(அலுவலக செய்தியாளர்)

எதிர்வரும் இரண்டாம் திகதி முகமாலையில் நடைபெறவுள்ள தேர்தல் வாக்களிப்பு குறித்தும், வாக்காளர்களை ஒழுங்குபடுத்தல் மற்றும் நடவடிக்கைகள் குறித்தும் கிளி.மாவட்ட அனைத்துக் கிராம சேவை அலுவலர்களுடனான கலந்துரையாடலும், செயற்றிட்ட அறிவுறுத்தல்கள் நேற்று முன்தினம் கிளி.மாவட்ட அரச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி அரச அதிபர் தி.இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற மேற்படி அமர்வில் கிளி.மாவட்ட மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகம், கிளி. கரைச்சி,கண்டாவளை,பூநகரி, பளைப்பிரதேச செயலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

தேர்தல் வாக்களிப்பின் போது அவதானிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டிய விடயங்கள் குறித்து கலந்துகொண்ட கி.சே. அலுவலர்களுக்கு தெரிவித்ததுடன் தற்போது மாற்றியமைக்கப்பட்டுள்ள வாக்களிப்பு நிலையங்களின் பெயர் விபரங்கள் குறித்து வாக்காளர்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் கி.சே.அலுவலர்களுக்கு விளக்கம் அளித்துள்ளார். (சோ)

## கிளி.ஆரம்ப இந்து வித்தியாலயத்தில் மாதிரிப் புத்தாண்டு நிகழ்வு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி இந்து ஆரம்பவித்தியாலய 1ஆம்,2ஆம் ஆண்டு சிறார்களின் மாதிரி புத்தாண்டு கொண்டாட்ட நிகழ்வு நேற்று வித்தியாலய முதல்வர் ம.உமாசங்கர் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வின் முதன்மை விருந்தினராக கிளிவலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சிவநாதன் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், சிறார்களின் பெற்றோர்கள் கலந்து நிகழ்வினை சிறப்பித்தனர்.

மேற்படி நிகழ்வில் சிறார்கள் தங்கள் பெற்றோர்களை வணங்கியதுடன் கைவிஷேசங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்படி சிறார்களுக்கு சேமிப்பினை ஊக்குவிக்கும் வகையில் உண்டியல்கள் அன்பளிப்பாக வழங்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# அரசாங்க அறிவித்தல்

# பாராளுமன்றத் தேர்தல் 2004.04.02

## தேர்தல் மாவட்டம் இல. 10. யாழ்ப்பாணம்

அரச கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் உள்ள வடமராட்சி கிழக்கு (ஒரு பகுதி), பச்சிலைப்பள்ளி, கரைச்சி, கண்டாவளை, பூநகரி ஆகிய பிரதேசங்களில் உள்ள வாக்காளர்களுக்கான வாக்கெடுப்பு நிலையங்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன. புதிய வாக்கெடுப்பு நிலையங்களின் பெயர்கள் அந்தந்த வாக்கெடுப்பு நிலையத்தின் பெயருக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ளன.

**அந்தந்த பிரதேச வாக்காளர் யாவரும் திருத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்களிலேயே வாக்களித்தல் வேண்டும்.**

செ.பத்மநாதன்
தெரிவித்தாட்சி அலுவலர்
தேர்தல் மாவட்டம் இல. 10- யாழ்ப்பாணம்
2004.03.27

### வாக்கெடுப்புப் பிரிவு 'எ' பருத்தித்துறை

| வாக்கெடுப்பு மாவட்ட இல. | தற்பொழுதுள்ள வாக்கெடுப்பு நிலையங்கள் | திருத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் |
|---|---|---|
| 36 | யா/செம்பியன்பற்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. எ/36 முகமாலை |
| 37 | யா/தாளையடி றோமன்கத்தோலிக்க தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. எ/37 முகமாலை |
| 38 | யா/மருதங்கேணி இந்து தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. எ/38 முகமாலை |
| 39 | யா/உடுத்துறை மகா வித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. எ/39 முகமாலை |
| 40 | யா/ஆழியவளை இலங்கை கிறிஸ்தவ ஆலய தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. எ/40 முகமாலை |
| 41 | யா/வெற்றிலைக்கேணி பரமேஸ்வர வித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. எ/41 முகமாலை |
| 42 | யா/கேவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. எ/42 முகமாலை |
| 43 | யா/உபஅஞ்சல் அலுவலகம் கண்டிக்குளம் | தற்காலிக கொட்டகை இல. எ/43 முகமாலை |

### வாக்கெடுப்புப் பிரிவு 'க' கிளிநொச்சி

| வாக்கெடுப்பு மாவட்ட இல. | தற்பொழுதுள்ள வாக்கெடுப்பு நிலையங்கள் | திருத்தப்பட்ட வாக்கெடுப்பு நிலையங்கள் |
|---|---|---|
| 01 | கி/வேம்பொடுகேணி அரசினர் தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. க/1, முகமாலை |
| 02 | கி/பளை மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. க/2, முகமாலை |
| 03 | கி/வேம்பொடுகேணி மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. க/3, முகமாலை |
| 04 | கி/பளை மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. க/4, முகமாலை |
| 05 | கி/பளைமகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. க/5, முகமாலை |
| 06 | கி/சோறன்பற்று கணேச வித்தியாலயம் | தற்காலிக கொட்டகை இல. க/6, முகமாலை |
| 07 | கி/முகாவில் அரசினர் தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை இல. க/7, முகமாலை |
| 08 | கி/கோவில் வயல் அரசினர் தமிழ்கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை.இல.க/8,முகமாலை |
| 09 | கி/பரந்தன் இந்துமகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/9,முகமாலை |
| 10 | கி/கண்ணகைபுரம் அரசினர் தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை.இல.க/10,முகமாலை |
| 11 | கி/முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/11,முகமாலை |
| 12 | கி/முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/12,முகமாலை |
| 13 | கி/முரசுமோட்டை முருகானந்தா மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/13,முகமாலை |
| 14 | கி/பரந்தன் இந்துதமிழ்கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை.இல.க/14,முகமாலை |
| 15 | கி/பரந்தன் இந்துதமிழ்கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை.இல.க/15,முகமாலை |
| 16 | கி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/16,முகமாலை |
| 17 | கி/உருத்திரபுரம் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/17,முகமாலை |
| 18 | கி/கிளிநொச்சி கனிஷ்டவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/18,முகமாலை |
| 19 | கி/கிளிநொச்சி கனிஷ்டமத்தியமகா வித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/19,முகமாலை |
| 20 | கி/கனகாம்பிகை மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/20,முகமாலை |
| 21 ஆ | கி/திருவையாறு மகாவித்தியாலயம்(ஆண்வாக்காளர்கள்) | தற்காலிக கொட்டகை.இல.க/21ஆ,முகமாலை |
| பெ | கி/திருவையாறு மகாவித்தியாலயம் (பெண்வாக்காளர்கள்) | தற்காலிக கொட்டகை.இல.க/21பெ,முகமாலை |
| 22 | கி/கிளிநொச்சி கனிஷ்ட வித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/22,முகமாலை |
| 23 | கி/பரந்தன் இந்து வித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/23,முகமாலை |
| 24 | கி/கிளிநொச்சி இந்துக்கல்லூரி | தற்காலிக கொட்டகை.இல.க/24,முகமாலை |
| 25 | கி/பாரதிபுரம் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/25,முகமாலை |
| 26 ஆ | கி/கனகபுரம் அரசினர்தமிழ்கலவன் பாடசாலை(ஆண்வாக்காளர்) | தற்காலிக கொட்டகை.இல.க/26ஆ,முகமாலை |
| பெ | கி/கனகபுரம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை(பெண்வாக்காளர்கள்) | தற்காலிக கொட்டகை.இல.க/26பெ,முகமாலை |
| 27 | கி/ஸ்கந்தபுரம் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/27,முகமாலை |
| 28 | கி/அக்கராயன் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/28,முகமாலை |
| 29 | கி/கண்டாவளை மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/29,முகமாலை |
| 30 | கி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/30,முகமாலை |
| 31 | கி/வட்டக்கச்சி மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/31,முகமாலை |
| 32 | கி/பெரியகுளம் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/32,முகமாலை |
| 33 ஆ | கி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்(ஆண்வாக்காளர்கள்) | தற்காலிக கொட்டகை.இல.க/33ஆ,முகமாலை |
| பெ | கி/இராமநாதபுரம் மகாவித்தியாலயம்(பெண்வாக்காளர்கள்) | தற்காலிக கொட்டகை.இல.க/33பெ,முகமாலை |
| 34 | கி/தர்மபுரம் இல.01, அரசினர் தமிழ்கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை.இல.க/34,முகமாலை |
| 35 | கி/பிரமந்தனாறு அரசினர் தமிழ்கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை.இல.க/35,முகமாலை |
| 36 | கி/வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/36,முகமாலை |
| 37 | கி/கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/37,முகமாலை |
| 38 | கி/கறுக்காய்த்தீவு மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/38,முகமாலை |
| 39 | கி/பு.நகரி மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/39,முகமாலை |
| 40 | கி/பு.நகரி மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை.இல.க/40,முகமாலை |
| 41 | கி/பு.நகரி மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை. இல. க/41, முகமாலை. |
| 42 | கி/கௌதாரிமுனை அரசினர் தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/42, முகமாலை. |
| 43 | கி/செம்பன்குன்று அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/43, முகமாலை. |
| 44 | கி/தம்பிராய் அரசினர் தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/44, முகமாலை. |
| 45 | கி/நல்லூர் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை. இல. க/45, முகமாலை. |
| 46 | கி/வேரவில் இந்து தமிழ் கலவன் பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/46, முகமாலை. |
| 47 | கி/வேரவில் இந்து தமிழ் கலவன்பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/47, முகமாலை. |
| 48 | கி/கரியாலை நாகபடுவான் இல.03 பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/48, முகமாலை. |
| 49 | கி/முழங்காவில் மகாவித்தியாலயம் | தற்காலிக கொட்டகை. இல. க/49, முகமாலை. |
| 50 | கி/இரணைமாதா றோமன் கத்தோலிக்க பாடசாலை | தற்காலிக கொட்டகை. இல. க/50, முகமாலை. |

(சி-9452)



**சிந்தனைக்கு**

வீரசுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 31 -03-2004

## காலம் தாழ்த்தியதாயினும்...!

சிறிலங்கா அரச வானொலி மற்றும் தொலைக்காட்சி நிறுவனங்கள் பக்கச் சார்பாக நடந்துகொள்கின்றன என்றெழுந்த குற்றச்சாட்டினை அடுத்து அந்நிறுவனங்களைத் தேர்தல் ஆணையாளர் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளார். இதன் பிரகாரம் அரச ஊடகங்களை ரூபவாஹினி தொலைக்காட்சிச் சேவை ஐ.ரி.என். தொலைக்காட்சிச் சேவை மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் என்பன பொறுப்பேற்கப்பட்டு அவற்றைக் கட்டுப்படுத்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்கவின் இந் நடவடிக்கையானது சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் ஒரு முன்னொடி நடவடிக்கை என்ற ரீதியில் வரவேற்கத் தக்கதே. ஆயினும் இது ஒரு காலம்தாழ்த்திய நடவடிக்கை என்பதே பரவலான அபிப்பிராயமாகும். இந்நடவடிக்கை குறித்து கருத்துத்தெரிவித்த ஒருவர், குதிரை வெளியேறிய பின் லாயத்தைப் பூட்டியதற்கு ஒப்பானதென்றார்.

ஆயினும், தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கையில் சிறிதளவேனும் நன்மை கிட்டுவதற்கு வாய்ப்பும் இல்லாமல் இல்லை. அதாவது தேர்தலின் போதாயினும் அரச ஊடகங்கள் ஒருதலைப்பட்சமாக நடப்பதைத் தவிர்த்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுதல் கூடும். அதாவது அரச ஊடகங்களைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள சனாதிபதி சந்திரிகா தரப்பினர் தேர்தலின் போது அவற்றைத் தமது தேவைக்குப் பயன்படுத்தாமல் தடுப்பதற்கு சிறிதளவு வாய்ப்பு உருவாகக் கூடும்.

சனாதிபதி சந்திரிகா அரச ஊடகங்களைத் தமது தேவைக்கு ஏற்றவகையில் பயன்படுத்திக் கொள்வதில் எந்தவித தயக்கத்தையும் காட்டியவர் அல்ல. கடந்த ஆட்சிக் காலத்தில் முன்னெப்பொழுதும் இல்லாதளவிற்கு ஏனையோர் மீதான அவதூறுப் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டமைக்குப் போதிய ஆதாரங்கள் உண்டு.

இதனாலேயே தேர்தல் ஒன்றிற்குத் தயாராவதெனத் தீர்மானித்ததும் ஐ.தே.முன்னணி அரசாங்கத்திடம் இருந்து சனாதிபதி சந்திரிகா பறித்தெடுத்த மூன்று அமைச்சுக்களில் ஒன்றாக ஊடகத்துறை இருந்தது. இவ்வாறு பறித்தெடுத்தமைக்குக் காரணம் அரசாங்கத்திற்கு எதிரான பிரச்சாரத்தை முடுக்கிவிடுவதற்காகவே ஆகும்.

இதன் காரணமாக சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் அரச ஊடகங்கள் அரசாங்கத்திற்கு எதிராகவே பிரச்சாரத்தில் ஈடுபடும் நிலை தோன்றியது. அதேவேளை அரச ஊடகங்களின் ஒருதலைப்பட்சமான செயற்பாடானது பலத்த கண்டனங்களுக்கும் உள்ளாகியிருந்தது. இந்நிலையில் தான் தேர்தலுக்கு மூன்று தினங்கள் இருக்கையில் இவ் ஊடகங்களைத் தேர்தல் ஆணையாளர் பொறுப்பேற்றுள்ளார்.

தேர்தல் ஆணையாளர்இவ்வூடகங்களை பாராளுமன்றம் கலைக்கப்பட்டு , தேர்தல் திகதி அறிவிப்புச் செய்யப்பட்ட உடன் பொறுப்பேற்றிருப்பின் --சற்று முன்னேற்றகரமானதாக இருந்திருக்கும். அதாவது தேர்தல்காலம் முழுவதற்குமான பக்கச்சார்பற்ற நிலைப்பாட்டைக் கடைப்பிடித்திருக்க முடியும். ஆயினும் காலம் தாழ்த்தியாயினும் தேர்தல் ஆணையாளர் இம்முடிவிற்கு வந்துள்ளமை சில தினங்களாயினும் ஊடகங்கள் பக்கச் சார்பற்றுச்செயற்பட வாய்ப்பை ஏற்படுத்துவதாக இருக்கும்.

அதுமட்டுமல்ல, இம்முறை தேர்தலானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும். கடும்போட்டியும் நிலவும் எனவும் எதிர்பார்க்கப்படுவதனால் ஊடகங்கள் சனாதிபதியின் கட்டுப்பாட்டில்இருப்பது சில குழப்பங்கள் ஏற்படக்காரணமாகக் கூடும். அதாவது தேர்தல் ஆணையகம் கூட இதனால் நெருக்கடிக்கு உள்ளாகக் கூடும். ஏற்கனவே சனாதிபதி சந்திரிகாவின் கட்டுப்பாட்டில் ஊடகத்துறை இருந்த வேளையில் தேர்தல் ஆணையாளர் தெரிவித்த கருத்துக்களை அரச ஊடகங்கள் திரிபுபடுத்தி வெளியிட்டதாக தேர்தல் ஆணையாளரே குறிப்பிட்டிருந்தார். இந்நிலையில் தேர்தல் முடிவுகள் நெருக்கடி மிக்கதாக இருக்கையில் சனாதிபதி சந்திரிகா ஊடகங்களை எந்தவகையில் பயன்படுத்துவார் எனத் தீர்மானிக்க முடியாது. இதற்கு எடுத்துக்காட்டுக்களும் இல்லாமலில்லை. கடந்தமுறை பிரச்சார நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர் கூட, சனாதிபதித் தேர்தல் விதிகளுக்கு மாறாக அரச ஊடகங்களில் பிரச்சாரம் செய்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

ஆகையினால், காலதாமதமான நடவடிக்கையாயினும் தேர்தல் ஆணையாளரின் நடவடிக்கை வரவேற்கத்தக்கதே. நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதியின் செயற்பாட்டுக்கு இது கட்டுப்பாடுகளை விதிப்பதாகவும் ,தேர்தலின் போது ஏற்படக் கூடிய குழப்பங்களைத் தடுப்பதற்கும் ஏதுவானதாக இருக்கும் ஆகையினால் தேர்தல்ஆணையாளரின செயற்பாடு நீதியின்பாற்பட்டதே என்றே கொள்ளலாம்.

# ஐ. ம. சு. முன்னணி ஆட்சிக்கு வந்தால் யுத்தத்தை முன்னெடுக்கும் வாய்ப்புள்ளது

### மட்டு. ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

(கொழும்பு)

ஐ.ம.சு. முன்னணி மீண்டும் ஆட்சிக்கு வருமாயின் அது மீண்டும் யுத்தத்தை முன்னெடுத்தும் செல்லும் என தான் உணருவதாக மட்டக்களப்பு மாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார்.

சந்திரிகாவின் ஐ.ம.சு. முன்னணி ஆட்சியமைத்தால் சமாதான நடவடிக்கைகள்முன்னெடுத்துச் செல்லப்படுமா என கேட்கப்பட்டதற்கு அவர் அவ்வாறான சாத்தியம் காணப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, ஐ.ம.சு.முன்னணி விடுதலைப்புலிகள் தமிழர்களின் ஏகபிரதிநிதி என்பதை மறுத்துள்ளதாலும் புரிந்துணர்வு உடன் பாட்டை நிராகரித்துள்ளதாலும் இந்த உண்மை புலப்படுவதாக தெரிவித்துள்ளார். தமிழ் மக்கள் 20வருடகாலமாக யுத்தகொடுமைகளை அனுபவித்துவந்துள்ளதாகவும் இனியும் இவ்வாறான தொரு யுத்தத்துக்கு முகம் கொடுக்க முடியாதிருக்கிறார்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

சந்திரிகாவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் இனப்பிரச்சினை தொடர்பாக எதுவும் தெளிவாக குறிப்பிடாத படியாலும் அக்கட்சி மீது தமிழ் மக்கள் சந்தேகங்கொள்ளவேண்டியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# முஸ்லிம்கள் தனித்தரப்பு என்பதை நிரூபிக்கவே யாழ்.இல் போட்டி

### அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக கலந்துகொள்வதற்கு முஸ்லிம்களுக்குள்ள அருகதையை நிருபிப்பதற்காகவே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யாழ்ப்பாணத்திலும் போட்டியிடுகிறதென அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறியுள்ளார்.

புத்தளம் கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற இடம்பெயர்ந்த யாழ். முஸ்லிம் வாக்காளர்களுக்கும் வேட்பாளர்களுக்குமான கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளர் சுபியான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஹக்கீம் தொடர்ந்து உரையாற்றுகையில்,

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுகின்றது எனக் காட்டுவதற்காக வெறும் அடையாளத்திற்காக நாம் போட்டியிடவில்லை. அந்த மண்ணுக்கு முஸ்லிம்களும் சொந்தக்காரர்கள் தான் என்ற உண்மையை சர்வதேசத்திற்கு உணர்த்துவதே எமது நோக்கமாகுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்ற யுத்தவெறியர்களைக் கலைத்தவர் சமாதானம் பற்றிப் பேசுவது வேடிக்கையாகும்

### சந்திரிகா மீது வாசுதேவ நாணயக்கார சாடல்

(கொழும்பு)

இனவெறி, மதவெறி மற்றும் யுத்தவெறிபிடித்த சக்திகளின் தூண்டுதல் காரணமாக பாராளுமன்றத்தைக் கலைத்த சனாதிபதி இன்று தான் சமாதானத்துக்காகப் பாடுபடுவதாகக் கூறுவது வேடிக்கையானதென இரத்தினபுரி மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் கடந்த சனிக்கிழமை புதிய இடதுசாரி முன்னணியில் தேர்தல் பிரச்சாரத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டும் என்பது அனைவரதும் எதிர்பார்ப்பாகும். ஆனால் இன்று சமாதானத்திற்காகப் பாடுபடுபவர்கள் எனக் கூறப்படுபவர்கள் தங்களது சுய இலாபத்திற்காகவும், பதவி ஆசைக்காகவும் அரசியல் சதுரங்க விளையாட்டை தேர்தல் ஒன்றின் மூலம் ஆரம்பித்துள்ளனரென அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் தேர்தல் மக்கள் எதிர்பார்க்காத ஒன்றாம். இனம், மதம், யுத்தவெறிபிடித்தவர்களின் தூண்டுதல் காரணமாக சனாதிபதி தனது சுயநலத்துடன் கூடிய பதவி ஆசை காரணமாக பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு வேடிக்கை பார்க்கின்றார். இதனால் பாதிக்கப்படுவது அப்பாவிப் பொதுமக்களே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# கிழக்கு, கொழும்பில் பாதுகாப்பு அதிகரிப்பு

### சிறிலங்கா அதிகாரி தெரிவிப்பு

கிழக்கு மாகாணம் மற்றும் கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா படைகளின் சார்பில் பேசவல்ல ஒருவர் பி.பி.ஸிக்கு தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு அரசாங்க அதிபரும், தெரிவத்தாட்சி அதிகாரியுமான மோனகுருசாமி மற்றும் இந்து காலச்சார அமைச்சர் மகேஸ் வரன், ஈ.பி.டி.பி.உறுப்பினர் சங்கரன் ஆகியோர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சிறிலங்கா தேர்தல் ஆணையாளரின் உத்தரவிற்கு எதிராக நீதிமன்றில் வழக்கு

(கொழும்பு)

சுயாதீன தேர்தல் தொடர்பில் தேர்தல் ஆணையாளர் அரச இலத்திரனியல் ஊடகங்களுக்கு வழங்கியுள்ள ஆலோசனைகளை அதிகாரமற்றது என உத்தரவிடகோரி உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனுவை அரசாங்கத்தின் 3 இலத்திரனியல் ஊடகங்களான ரூபவாஹினி கூட்டுத்தாபனம், இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் சுயாதீன ஒளிபரப்பு கூட்டுத்தாபனம் ஆகியன தாக்கல் செய்துள்ளன. இதில் தேர்தல் ஆணையாளர், மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

மார்ச் 8ஆம் மற்றும் 11ஆம் திகதிகளில் தேர்தல் ஆணையாளர் வெளியிட்ட ஆலோசனையின் அடிப்படையில் அச்சு ஊடகங்களில் தேர்தல் நடைபெறுவதற்கு 48 மணித்தியாலத்திற்கு முன்னர் பிரச்சாரம் நிறுத்தப்படவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் இலத்திரனியல் ஊடகங்கள் 72 மணித்தியாலங்களிற்கு முன்னர் தேர்தல் பிரச்சாரங்களை நிறுத்த வேண்டும் என குறிப்பிடப்படுவது அடிப்படை மனித உரிமைமீறும் செயல் என குறிப்பிடப்பட்டுள்ளது. (32)

# ஹசான் விலக முடிவு!

அவுஸ்திரேலியாவுடனான மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் சிறிலங்கா அணி தோல்வியடைந்ததையடுத்து டெஸ்ட் அணியின் தலைவர் ஹசான் திலகரட்ன தலைமைப் பொறுப்பிலிருந்து நீங்கிவிடுவதாக அறிவித்துள்ளார்.

11டெஸ்ட் போட்டிகளுக்கு தலைமை தாங்கியுள்ள இவர் 1 போட்டியில் மட்டுமே வெற்றி பெற்றுத்தந்திருக்கிறார். 4போட்டிகளில் தோல்வியடைந்துள்ளார். தலைமைப்பதவியிலிருந்து ராஜினாமாச்செய்தாலும் அணிக்காக விளையாட விரும்புவதாகவும் தெரிவாளர்களின்கைகளிலேயே அது தங்கியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# பந்து வீச்சால் மீண்டும் சர்ச்சை

முரளிதரனின் 'தூஸ்ரா' பந்து வீச்சுமுறை சந்தேகத்தை ஏற்படுத்துவதாக இங்கிலாந்தின் நடுவர் தெரிவித்துள்ளார்.

தூஸ்ரா முறையானது பந்து நிலத்தில் பட்டு துடுப்பாட்ட வீரரை விலத்திச்செல்வதாகும். இதில் பிரச்சினை இல்லாவிடினும் இந்தப் பந்து வீச்சானது பந்து கையை விட்டு செல்றவுடன் கைநேராகிறது. ஆனால் முரளியின் கை பந்து கையை விட்டகலும் போது நேராகிறது. இது எறிபந்துக்கு ஒப்பானது எனக் கருதப்படுகிறது.

# மாணவியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய இளைஞனுக்கு 27 வருட கடூழிய...

(வவுனியா-செட்டிகுளம்)

08 வயதும் ஆகாத மாணவியைக் கடத்தி கொடூரமான முறையில் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி தலைமறைவாகியுள்ள இளைஞனுக்கு 27 வருட கடூழிய சிறைத் தண்டனை நேற்று விதிக்கப்பட்டது. வவுனியா மேல் நீதிமன்ற வரலாற்றில் முதல் முறையாக இவ்வாறு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

தலைமறைவாகியுள்ள எதிரியை உடனடியாக கைது செய்யுமாறு பிடியாணை விதிக்கப்பட்டுள்ளது. 05.07.2000 திகதி அன்று பூந்தோட்டத்தில் சம்பவம் நடைபெற்றுள்ளது. பாடசாலைவிட்டு கடும்வெய்யிலில் சிநேகிதியுடன் வந்த வழியில் வீடு ஒன்றில் தாகத்திற்கு தண்ணீர் கேட்ட சிறுமி ஒருவருக்கே இந்த அவலம் ஏற்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட சிறுமியை மருத்துவப் பரிசோதனைசெய்த வவுனியா அரச வைத்திய பெண்நோயியல் நிபுணர் எம்.எம் மொஹீதீன் சிறுமியின் உடல் உள்ளேயும் வெளியேயும் வல்லுறவு காரணமாக பாரதூரமான காயங்கள் ஏற்பட்டுள்ளன என தமது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நட்ட ஈடாக 20,000 ரூபாவும், தண்டப் பணமாக 3000 ரூபாவும் எதிரி செலுத்த வே... உத்தரவு இட்... கடத்தியதற்கு... வல்லுறவு... வருட சிறை... அபராத ... தத் தவறினா... சிறைத் தண்ட... தனியே அனுபவிக்க... யில் தண்டனைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் நீதிபதி பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

26.03.2001 மேல் நீதிமன்றினால் பிணை வழங்கப்பட்டு அன்றுமுதல் எதிரி தலைமறைவாகியுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (21)

# புலிகளைப் பேச்சுக்கு அழைப்பதற்கு இப்போதே ஏற்பாடு செய்துவருகின்றோம்

## சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா

நாம்அரசாங்கம் அமைத்த பின்னர் புலிகளை பேச்சுவார்த்தைக்கு அழைப்பதற்கான ஏற்பாடுகளை தற்போதே செய்து கொண்டுவருகின்றோம் என சிறிலங்கா சனாதிபதி கூறியுள்ளார்.

ஐ.ம.சு.முன்னணி ஆட்சிக்கு வருமாயின் யுத்தமே தொடருமென ஐ.தே. கட்சி பிரச்சாரம் செய்துவருகின்ற போதிலும் நான் ஒரு போதும் அவ்வாறான ஓர் நிலைப்பாட்டுக்கு செல்லப்போவதில்லையெனவும் சமாதானப் பேச்சு வார்த்தைகளே தொடரப்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

குருநாகலில் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அத்துடன் "நானே 1994ஆம் ஆண்டு சமாதானப் பேச்சுவார்த்தையை முன்னெடுத்தேன் என்ற ரீதியில் நான் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்துவேன்எனக்கூறியுள்ளார். இதேவேளை பொலிசாரின் கடமைகளை அரசியலில் இருந்து பிரிக்க வேண்டும் எனவும் கூறியுள்ளார். (32)

# தனது வாரிசுகள் பதவிக்கு வரும்வரை அரசியலைத் தொடர்வதே சந்திரிகாவின் திட்டம்

## -பொலநறுவை இளைஞர் முன்னணித்தலைவர்

சனாதிபதி சந்திரிகாவின் நோக்கம் தனது வாரிசுகள் அரசியலில் பிரவேசிக்கும் காலம் வரும் வரைக்கும் அரசியலைக் கட்டிப் பிடித்திருப்பதே என பொலநறுவை மாவட்ட தேசிய இளைஞர் முன்னணித்தலைவர் நாயக்கா பத்திரிகையாளர் சந்திப்பின்போது தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறிய போது சந்திரிகாவின்அரசு ஆட்சியிலிருந்திருக்குமாயின் அங்குஇவ்வாறான பத்திரிகையாளர் சந்திப்பு நடந்திருக்காது என்றும் மின்சார வெட்டு ஏற்பட்டிருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

கடந்த 7 ஆண்டுகளாக சிந்திரிகாவின் ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்ததை குறிப்பிட்ட அவர் மீண்டும் அவர் பதவிக்கு வந்தால் உடனடியாக பொருளாதார வளர்ச்சி ஏற்படாது என்றார். தற்போதைய ஐ.தே.மு ஆட்சியில் பொலநறுவை மாவட்ட எல்லைக் கிராம விவசாயிகள் மகிழ்ச்சியாகவும் அச்சமின்றியும் வாழ்ந்தால் பிரதமர் ரணில் மீண்டும் அரசு அமைக்க இளைஞர் ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## -யாழ்-இருபாலைப்பகுதியில்-

# இராணுவப்பாதுகாப்புடன் பிரச்சாரம் ஆனந்தசங்கரி குழு விரட்டியடிப்பு

(யாழ்ப்பாணம்)

வீ.ஆனந்த சங்கரியின் சுயேச்சைக் குழுவிற்கு ஆதரவாகப் பிரச்சாரநடவடிக்கைகளில் ஈடுபட்டுச் சென்ற குழுவினரை மக்கள் விரட்டியடித்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் இரவு யாழ். இருபாலைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்குப் புறம்பாக எதிர்வரும் தேர்தலில் போட்டியிடும் இக்குழுவினர் இராணுவப் பாதுகாப்புடன் பிரச்சாரநடவடிக்கையில் ஈடுபடமுனைந்ததினால் ஆத்திரமடைந்த மக்கள் இவர்களை விரட்டியடித்துள்ளதுடன்.

இராணுவ பாதுகாப்புடன் எமது பிரதேசத்துக்குள் வந்து தேச விரோதக்கருத்துக்களை திணிக்க முயன்றால் விழைவு விபரீதமாகும் என எச்சரித்தும் அனுப்பியுள்ளனர். (33)

## கல்வி டிப்ளோமா வகுப்பு

முல்லைத்தீவு ஆசிரியர் கல்வி நிலையத்தில் பயிலும் ஆசிரிய மாணவர்களுக்கான பட்டப் பின்படிப்பு கல்வி டிப்ளோமா வகுப்புக்கள் எதிர்வரும் 04,05,06ம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்களைத் தவறாது சமுகமளிக்குமாறு சிரேட்ட விரிவுரையாளர் க.சரவணபவன் கேட்டுக்கொள்கின்றார். (26)

## தமிழ்க்..

வரன் எதிர்வரும்தேர்தலை ஒட்டி யாழ். மக்களுக்கு விடுத்துள்ள செய்தியிலேயே அவர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளதாக நேற்று யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலில் இடம்பெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் இறுதிப்பிரச்சாரக் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய முன்னாள் அமைச்சர் தி.மகேஸ்வரனின் பேச்சாளர் அவர் சார்பாக இக் கருத்துக்களை வெளியிட்டு மக்களிடம் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.(33)

## மட்டு..

தெரிவிக்கப்படுகிறது. துப்பாக்கிச் சூடு நடத்தியோர் மதில் ஏறித் தப்பியோடியுள்ளனர்.

இத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின் போது இதனைத் தடுக்க முயன்ற இருவரில் ஒருவர் காயத்திற்குள்ளாகி மரணமடைந்தாகவும், மற்றொருவர் காயமடைந்து மட்டு. வைத்தியசாலையில் அனுமதிக்கபட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் காயமடைந்த ராஜன் சத்தியமூர்த்தி உட்பட மூவரையும் வைத்தியசாலைக் குக் கொண்டு சென்றதாகவும், வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் ராஜன் சத்தியமூர்த்தியின் மைத்துனரா கந்தையா கனகசபை உயிரிழந்ததாகவும் பின்னர் மருத்துவ மனைக்குக் கொண்டு சென்ற சில நிமிடங்களில் ராஜன் சத்திய மூர்த்தி மரணமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

... ந்த ... ராஜ ... ன் ... ன ... ள் ... (32)

## நிமலராஜன்..

அ.பிறேம்சங்கர் பிறப்பித்திருந்தார்.

இதனிடையே அவர் கைதுசெய்யப்பட்டமை தொடர்பான தகவல் யாழ் நீதிவான் சி.த.விக்கினராஜாவிற்கு பொலிசாரால் நேற்று தெரிவிக்கப்பட்டது. இதை...டுத்து குறித்த நபரை நாளை யா... நீதிமன் றில் ஆஜர்படுத்துமாறு பொலிசாருக்கு நீதிவான் உத்தர விட்டுள்ளார்.

இதேவேளை ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலைச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த ஈ.பி.டி. பி. அமைப்பின் உறுப்பினர்கள் ஐவரும் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்ததும் அவர்களுள் ஒருவரான ஜெகன் எனப்படும் கந்தசாமி ஜெகதீஸ்வரன் தொடர்ந்து விசாரணைகளுக்கு ஆஜராகாததையடுத்து நீதிமன்றம் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்ததும் தெரிந்ததே.

## ஐ.ம.சு...

தேர்தல் சுவரொட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் நேற்றுக் கல்முனையில்அக்கட்சியின் அலுவலகம் ஒன்றில் இருந்து தாக்குதல் ஆயுதங்களும் கைப் பற்றப்பட்டிருந்தன. இது தொடர்பில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட16பேர் இன்று காலை அக்கரைப்பற்று நீதவான் முன்னால் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.(32)

## -பூநகரி கடற்பகுதியில்-

# குருநகர்,பாசையூர் மீனவரின் அத்துமீற...லை கட்டுப்படுத்த கிளி.அரசஅதிபர்...

(கிளிநொச்சி)

பூநகரி கடற்பகுதிக்குள் குருநகர், பாசையூர் மீனவர்களின் இழுவைப் படகுகளின் அத்துமீறலினால் பூநகரி மீனவர்கள் தமது தொழில் பாதிக்கப்படுவதாக கிளிநொச்சி அரசாங்க அதிபரிடம் முறையீட்டுள்ளனர்.

இம் முறைப்பாடு குறித்து நடவடிக்கை எடுத்துள்ள கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் இராசநாயகம் அவர்கள் குருநகர், பாசையூர் மீனவர்களின் அத்துமீறலைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தின் விபரம் வருமாறு.பூநகரி கடற்தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தினால் யாழ்ப்பாணத்...தச் பாசையூர் ... இழுவை படகு... னால் எமது ... பாதிப்படைவ... முறையிடப்பட...

இவ் அத்து... பிரதேசத்தின்... வலைகள் பா... சேதத்... ளாகி தொழில்... கு உட்பட்டிருப்பதுடன், ... வழங்களும் அழிக்கப்பட்டு வருகின்றன. இவ் அத்துமீறல் எமது கடல் வலயப் பகுதியினுள் இடம்பெறுவதனால் பூநகரி பிரதேச மீனவர்களின் பாதிப்பு மிகமிக கவலைக்குரியதாகும். அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபடும் தங்கள் பகுதி மீனவர்களின் நடவடிக்கையைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

## -வவு.தோணிக்கல் பகுதியில்-

# கைத்துப்பாக்கியுடன் கொள்ளையில் ஈடுபட்ட மூவர் பிடி...

(செட்டிகுளம்)

வவுனியா தோணிக்கல் பகுதியில் நேற்று முன்தினம் கைத்துப்பாக்கியுடன் கொள்ளையடித்த மூன்று சந்தேக நபர்களை வவுனியா பொலிசார் கைது செய்துள்ளனர் எனினும் கைத்துப்பாக்கி வைத்திருந்த நபர் தலைமறைவாகியுள்ளார். இந்த சம்பவம்பற்றித் தெரியவருவதாவது; தோணிக்கல் பகுதியில் வீட்டுக் கூரை வேலைக்காக நான்கு பேர் வந்துள்ளனர் அங்கு சில நாட்கள் தங்கி அந்த வேலைமுடிந்தவுடன் சிறிது தூரத்தி... கொள்ளையிடமுயன்ற சமயம் வீட்டில் இருந்தவர்கள் கூச்சலிட கைத்துப்பாக்கியால் வானத்தை நோக்கி சுட்டுள்ளார். அயலவர்களால் ஒருவர் தாக்கப்பட்டு பிடிக்கப்பட்டார் மக்கள் அந்த நபரினை வவுனியா பொலிசாரிடம் ஒப்படைத்தனர் விசாரணையினை மேற்கொண்ட பொலிசார் மேலும் இருவரைப் பிடித்துள்ளனர். இந்த சம்பவத்துடன் தொடர்புடைய மற்றும் ஒருவரையும் பொலிசார் தேடி வருகின்றனர். (21)

# உயர் நீதி மன்றத்தை அவமதித்ததாக எஸ்.பி.திஸாநாயக்க மீது குற்றப்பத்திரிகை

நீதிமன்றத்தை அவமதித்த குற்றசாட்டின் அடிப்படையில் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவின் மீது நேற்று உயர் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது சட்டமா அதிபர் இதனைத் தாக்கல் செய்துள்ளார்.

ஹபராதுவ பகுதியில் கடந்த நவம்பர் 3ஆம்திகதி உயர்நீதிமன்றத்தை அவமதிக்கும் வகையில் பேசியதாக அமைச்சர் மீது மூவர் மனுத்தாக்கல் செய்தனர். இதனை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் சட்டமா அதிபரின் குற்றப்பத்திரிகையின் அடிப்படையில் அமைச்சரை நீதிமன்றத்திற்கு விரைவில் ஆஜராக உத்தரவிடும் என எதிர்பார்க்கிறது.

# தேர்தல் வன்முறைகள் 1287 முறைப்பாடுகள்

நேற்றுக்காலை 6.00 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலயத்திற்குள் 60 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளன.

தேர்தல் வேட்புமனுத் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து இன்று வரை 1287 தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இதில் 440 முறைப்பாடுகள் ஐ.ம.சு.முன்னணியாலும் 287 முறைப்பாடுகள் ஐ.தே.கட்சியினாலும் அம்பாறையில் 102 முறைப்பாடும்,80 முறைப்பாடுகள் அநுராத...புரத்திலும் செய்யப்பபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (32)

## நடக்க..

வன்னியில் அதிகரிக்க வேண்டும் என்றார். அதற்கான ஒழுங்குகளை நாம் எல்லோரும் சேர்ந்து செய்ய வேண்டும் என்று கூறினார்.

யாழ்.மாவட்டத்தில் நான்கு லட்சத்துக்கும் மேல் வாக்காளர்கள் வாக்களிக்க முடியும் என்றும் இதன் மூலம் அனைத்து ஆசனங்களையும் பெறலாம் அத்துடன் சகல குளறுபடிகளையும் தடுக்கமுடியும் என்று கூறினார். கிழக்கு மாகாணத்தில் தமிழ் வாக்காளர்களை பிரதேச வேறுபாடுகளை மறந்து வாக்களிக்க வைக்க வேண்டும். வடக்கு கிழக்கு எமது கட்டுபாட்டுப் பகுதிகளில் எம் மக்கள் வாக்களிப்பதற்கான போக்கு வரத்... ...றும் உணவு தங்... ...ளை அரச அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தி மேற்கொள்ள வேண்டுமெனக் கூறினார்.

இளம்பரிதி அவர்கள் கூறுகையில், இத்தேர்தலில் எமது மக்கள் நேர்மையாக சென்று வாக்களிப்பதற்கான சகல ஏற்பாடுகளை முடிந்தவரை செய்துள்ளதாகவும் இதற்கு எமது மக்கள் பூரண ஒத்துழைப்பு தருவதாகவும் தங்களின் ஒத்துமைப்பையும் ஆதரவையும் ஆலோசனைகளையும் தந்துதவியதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம் எனக் குறிப்பிட்டார். பின்னர் செயலாளரின் நன்றியுரையுடன் கலந்துரையாடல் நிறை...ற்றது.

## ராஜன்..

ஏற்படுத்தியுள்ளது.

மட்டு- அம்பாறை மாவட்டத்தில் அமைதியான சூழ்நிலை யில் மேற்கொள்ளப்பட்டு வந்த தேர்தல் செயற்பாடுகள் கருணா குழுவினர் ஏற்படுத்திய குறுக்கீடுகள், தலையீடுகள் காரணமாக தேர்தல் களம் நெருக்கடிக்குள்ளாக்கப் பட்டிருந்தது. மட்டு மக்கள் ம... பீதியை ஏற்படுத்தும் இச்... களால் தமிழ் மக்கள் நி... மாறாது நடைபெற வு... தேர்தலில் தமிழ்த் தேசி... மைப்புக்கு ஆதர வாக ... தமிழரின் தேசிய ... உலகுக்கு உணர்த்... எனத்தெரிவிக்கப்பட்...